தமிழ்நாடு
உலக முதலீட்டாளர்கள் சந்திப்பு 2015

TAMIL NADU
GLOBAL INVESTORS MEET 2015

9th-10th September 2015
Venue: Chennai Trade Centre, Chennai

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
புரட்சித்தலைவி **அம்மா** அவர்களின் உரைகள்

தமிழ்நாடு
உலக முதலீட்டாளர்கள்
சந்திப்பு 2015

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
சென்னை, நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நடைபெற்ற
தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் சந்திப்பு 2015,
கண்காட்சியைத் தொடங்கி வைத்தும் மற்றும்
விழாவினை நிறைவு செய்தும்
ஆற்றிய பேருரையின் தமிழாக்கம்.
(09.09.2015 மற்றும் 10.09.2015)

வெளியீடு :
இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத்துறை,
சென்னை .

சிறப்பு வெளியீடு எண். 57

தமிழரசு

செப்டம்பர் 2015

வெளியிடுபவர் :
இயக்குநர்,
செய்தி – மக்கள் தொடர்புத்துறை,
சென்னை .

அச்சிட்டோர் :
தமிழரசு அச்சகம்,
110, அண்ணா சாலை,
சென்னை – 600 002.

பொருளடக்கம்

1. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
09.09.2015 அன்று சென்னை,
நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நடைபெற்ற
தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் சந்திப்பு 2015
மற்றும் கண்காட்சியைத் தொடங்கி வைத்து
ஆற்றிய பேருரையின் தமிழாக்கம் 5

2. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
10.09.2015 அன்று சென்னை,
நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நடைபெற்ற
தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் சந்திப்பு 2015
நிறைவு விழாவில் கலந்து கொண்டு
ஆற்றிய பேருரையின் தமிழாக்கம் 23

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் 09.09.2015 அன்று
சென்னை, நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நடைபெற்ற
தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் சந்திப்பு 2015
மற்றும் கண்காட்சியைத் தொடங்கி வைத்து
ஆற்றிய பேருரையின் தமிழாக்கம்

தமிழக அரசுடன் இணைந்து இந்த மாநாட்டில் பங்கு கொண்ட ஆஸ்திரேலியா, கனடா, ஜப்பான், கொரியா, பிரான்ஸ், இத்தாலி, பிரிட்டன், சிங்கப்பூர், ரஷியன்

பெடரேஷன் நாட்டைச் சேர்ந்த ஹை கமிஷனர்கள், நாட்டின் குழுத் தலைவர்கள், பிரதிநிதிகள், மாண்புமிகு பாராளுமன்ற துணை சபாநாயகர் டாக்டர் எம்.தம்பிதுரை, மாண்புமிகு மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், மாண்புமிகு மத்திய நெடுஞ்சாலை மற்றும் கப்பல் துறை இணை அமைச்சர் திரு.பொன்.ராதாகிருஷ்ணன், தமிழக தொழில் மற்றும் போக்குவரத்து துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி, தமிழக அமைச்சர்கள், பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், பிரிட்டன் வர்த்தக மற்றும் முதலீட்டு

இயக்குனர்கள், அமெரிக்கா–இந்தியா வர்த்தக சபையின் நிருவாகி மற்றும் துணைத் தலைவர், சிஐஐ முன்னாள் தலைவர் வேணு சீனிவாசன், பிக்கி அமைப்பின் தலைவர் ஜோட்ஸ்னா சூரி, 'அசோசம்' அமைப்பின் தலைவர் ராணா கபூர், தொழில் நிறுவனங்களின் தலைவர்கள், பல்வேறு நாட்டுப் பிரதிநிதிகளின் உறுப்பினர்கள், தலைமை செயலாளர் திரு.கே.ஞானதேசிகன், தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், தொழில் துறை கூடுதல் தலைமை செயலாளர் திரு. சி.வி. சங்கர், மத்திய மற்றும் மாநில அரசின் முதுநிலை அதிகாரிகள், மாநாட்டில் பங்கேற்றிருப்பவர்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்கள் அனைவரையும் இந்த வரலாற்றுப் புகழ்பெற்ற தலைசிறந்த மாநிலமான தமிழ்நாட்டிற்கு வரவேற்பதில் மட்டற்ற

மகிழ்ச்சியடைகிறேன். எங்களுடைய வரவேற்பினை ஏற்று இந்த வரலாற்றுப் புகழ்மிகுந்த கூட்டத்திற்கு வருகை புரிந்த அனைவருக்கும் நன்றி தெரிவிக்கிறேன். ஒன்பது நாடுகளான ஆஸ்திரேலியா, கனடா, பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான், கொரியா, சோவியத் நாடுகளின் கூட்டமைப்பு, சிங்கப்பூர், இங்கிலாந்து ஆகிய கூட்டுறவு நாடுகளாகவும் மற்றும் பிற நாடுகளிலிருந்தும் வருகை தந்திருக்கும் தொழிலதிபர்களுக்கும் நன்றி தெரிவிக்கிறேன். இந்த மாநாட்டிற்கு 15 நாடுகளிலிருந்து 1,000 பேராளர்கள் வருகை புரிந்திருக்கிறார்கள். கூடுதலாக இந்திய நாட்டின் வெவ்வேறு மாநிலங்களிலிருந்து 4,000 பேராளர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள். கலந்து கொண்டிருக்கும்

ஒவ்வொருவரையும் சென்னை மாநகரத்திற்கு வருக வருக என வரவேற்கிறேன்.

மிகவும் முன்னேறிய மாநிலம் தமிழ்நாடு

இந்திய நாட்டில், தமிழ்நாடு மிக முன்னேற்றமான, தலைசிறந்த, அனைத்துத் தொழில் திறன்களிலும் வெற்றிபெறுகின்ற புகழ் மாநிலமாகத் திகழ்கிறது. தொழிற்துறையில் சிறந்த கட்டமைப்பும், கல்வியில் சிறந்த பலதிறன்கள் பெற்ற மக்கள்தொகையைக் கொண்ட மாநிலமாகவும் தமிழ்நாடு மிளிர்கிறது. இந்தியாவில் உள்ள பல்வேறு தொழிற்திறன்களில், தமிழ்நாடு முதல் மாநிலமாகத் திகழ்கிறது. ஆடை உற்பத்தி, தோல் உற்பத்தி, தானியங்கி இயந்திர உதிரி பாகங்கள் உற்பத்தி, மிகுதிறன் பொறியியல் மின்நுட்ப உற்பத்தி, தகவல் தொழில்நுட்பத் துறை சார்ந்த பணிகள், நல்வாழ்வு ஆகிய துறைகளின் முதலீட்டில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. இந்தியாவிலேயே

தொழில்திறன் சார்ந்த பொருளாதாரப் பங்கில், தமிழ்நாடு முதலிடம் பெறுகிறது. இந்தியாவில் வெளிநாட்டு நேரடி முதலீட்டை அதிகமாகப் பெறுகின்ற மூன்றாவது மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. குறிப்பாக வெளிநாட்டு நிறுவனங்களுடைய தலைமை அலுவலகங்கள் வெவ்வேறு மாநிலங்களில் உள்ளதால், தமிழ்நாட்டினுடைய நேரடித் தொகை அந்தந்த மாநிலங்களுடன் இணைத்துக் கணக்கிடப்படுகிறது.

தனிநபர் வருமானம் கூடுதல்

இந்தப் புள்ளிவிவரங்களையெல்லாம் அறிந்தபிறகும், தற்போது இம்மாநாட்டை நடத்தக் காரணமென்ன எனக் கேட்கலாம்? இதற்கு என்னுடைய பதில், மிக எளிதானது. எனது தலைமையிலான அரசின் இலட்சியங்கள் தமிழ்நாட்டை மென்மேலும் உயர்த்துவதே ஆகும். மூன்றாண்டுகளுக்கு முன்பு தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023 என்ற திட்டத்தினை வரையறுத்து வழங்கினேன். தமிழ்நாட்டு மாநிலத்தின் ஒட்டுமொத்த தனி நபர் வருமானம், பிறநாடுகளின் உயர் மத்திய வர்க்கத்தினருடைய தனி நபர் வருமானத்திற்கு இணையாக 2023ஆம் ஆண்டிற்குள்

இலக்காக அமைய வேண்டும் என்பது எனது தலைமையிலான அரசின் இலட்சியமாகும். உலகிலுள்ள அனைத்து நாடுகளிலும் அமைந்துள்ள சிறந்த கட்டமைப்பு வசதிகளும், பல்திற சேவைகளும், தமிழ்நாட்டின் அனைத்து மக்களும் பெறச்செய்ய வேண்டும் என்பது எங்களின் உயர்ந்த நோக்கமாகும். தலைசிறந்த தொழில்நுட்ப, புத்தாக்க முயற்சிகளின் அறிவுசார் நகரமாக தமிழ்நாடு விளங்க வேண்டும். ஆசிய நாடுகளிலேயே மூன்றாவது இடத்திலும், இந்தியாவிலேயே முதலிடத்திலும், அதிகமான தொழில்முதலீடுகளைப் பெறுகின்ற இடமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. கட்டமைப்பு வசதிகளுக்கு மட்டுமே ஒட்டுமொத்த முதலீடாக 250 பில்லியன் அமெரிக்க டாலர் செய்யப்படவுள்ளது. இது வெறும் கனவோ, திட்டமோ அல்ல. இதற்காக, தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023 மூலமாக 217 திட்டங்களின் வழியாக 84 திட்டங்கள் செயல்படத் தொடங்கியுள்ளது.

எனது தலைமையிலான அரசு, சிறந்த செயலாக்கமும், அறிவித்த அறிவிப்புகளையும், கொடுத்த வாக்குறுதிகளையும், நிறைவேற்றுகிற அரசாகத் திகழ்கிறது. 1991இல் முதன் முறையாக நான் தமிழ்நாட்டின்

முதலமைச்சரானவுடன், இந்திய நாடு பல ஆண்டுகளாக முடங்கிக்கிடந்து பொருளாதாரக் கோட்பாடுகளையே மாற்ற வேண்டிய சூழலில் இருந்தபோது, எனது தலைமையிலான அரசு அந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி, பல முனைகளிலிருந்து முதலீடுகளைப்பெற்று வளர்ச்சிக்கு வித்திட்டது. அன்றைய சூழலில், தமிழ்நாட்டு மாநிலத்தின் தனிநபர் வருமானம் சராசரி தேசிய தனிநபர் வருமானத்தை விடக் குறைவாக இருந்தது. ஆனால், இன்று, தேசிய சராசரி வருமானத்தைவிட, தமிழ்நாடு ஒன்றரை மடங்கு கூடுதலாக பெருகி உள்ளது. இந்தியாவிலேயே தமிழ்நாடு, இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாகத் திகழ்கிறது. இவ்வெற்றி சாதாரணமான வெற்றியல்ல. எனது தலைமையிலான அரசின், செயலாக்கம், கூர்பார்வைகளின் அடிப்படையிலான திட்டங்கள், சிறந்த செயல்படுத்தும் முறைமைகளின் வாயிலாகப் பெறப்பட்ட நற்பலன்கள் ஆகும்.

1992இல் புதிய தொழிற்கொள்கை

1992ஆம் ஆண்டு, நான் அறிமுகப்படுத்திய, 'புதிய தொழிற்கொள்கை' மாநிலத்தில் தொழில் துறைக்கு ஓர் உந்துசக்தியாக விளங்கியது. அக்காலக் கட்டத்தில், உலகின் மிகப் பெரும் நிறுவனங்களான, போர்டு, ஹுண்டாய் தமிழ்நாட்டில் தமது முதல் தொழிற்சாலைகளை நிறுவின. அந்நேரத்தில், தமிழ்நாடு தானியங்கி இயந்திரங்கள் உற்பத்தி மையமாகத் திகழ அடிக்கல் நாட்டப்பட்டது.

உலகம் முன்னோக்கி நடைபோடும் சூழலை உணர்ந்த நான், தமிழ் நாட்டில் தொழிற்துறை மின்னல் வேகத்தில் வளர்ச்சி காண வேண்டும் என்பதற்கான நடவடிக்கை அவசியம் என்பதை உணர்ந்தேன். பல்வேறு துறைகளில், தமிழ்நாட்டை முன்னோடி மாநிலமாகத் தக்க வைப்பதும், புதிய தொழில் துறை முதலீடுகளில் திருப்புமுனை ஏற்படுத்துவதும் எங்கள் இலக்காக அமைந்தது. ஆகவே, தானியங்கி மற்றும் தானியங்கி வாகன உதிரிபாகங்கள் மற்றும் உயிர் தொழில்நுட்பத் துறைகளுக்கு 2014ஆம் ஆண்டில் எனது தலைமையிலான அரசு, மேம்படுத்தப்பட்ட துறைவாரியான கொள்கையினைத் தொடங்கி வைத்தது. 2012ஆம் ஆண்டில், சூரியஒளி மின்னாற்றல் கொள்கையினை எனது தலைமையிலான அரசு தொடங்கி வைத்ததன் பலனாக இன்று, இந்திய நாட்டிலேயே சூரிய மின்னாற்றல் உற்பத்தித்திறனில், மிகு மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது.

கடந்த நான்காண்டுகளில், தமிழ்நாட்டில், மின்னாற்றல்துறை, ஒரு புரட்சியைக் கண்டுள்ளது. மே 2011இல் நான் பதவியேற்கும்போது தொடர்மின் பற்றாக்குறை மிகப்பெரிய சவாலாக இருந்தது. மின்வெட்டு முழுவதுமாகக் களையப்பட்டு இன்று மின்மிகை மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. இனிவரும் காலத்தில் மின் பற்றாக்குறை ஏற்படாவண்ணம் உறுதி செய்ய, மரபுசார் மற்றும் புதுப்பிக்கத்தக்க மின்னாற்றல் திட்டங்களுக்கு சிறப்பான மின்கடத்து கட்டமைப்புகள் அமைக்கப்பட்டு, நீண்டகால மின்வழங்கு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

அடிக்கடி எனக்குள் ஒரு வினா எழுந்தது. எவ்வாறு தமிழ்நாட்டில் பொதுவாக அரசாங்கம் தொழில்சார்ந்த நோக்குடனோ அல்லது நல்வாழ்வு நோக்கு சார்ந்ததாக உள்ளது என்று? நாங்கள் தொழில் சார் நோக்குடனும், நல்வாழ்வு நோக்குடனும் செயல்படுகிறோம். இது எதிர்பாராத நிகழ்வல்ல. முதலீட்டு மையமாக தமிழ்நாடு திகழ அதன் பலமான மனிதவள மேம்பாட்டுக் குறியீடுகளைச் சார்ந்துள்ளது.

கல்வி, நல்வாழ்வு மற்றும் நலிவடைந்த மக்களுக்கான மேம்பாடு போன்றவை சமூகத் துறைகளில், எனது தலைமையிலான அரசு நீடித்த முதலீடு செய்வதிலிருந்து எழுந்தவையாகும். இன்று நாம் நாட்டிலேயே, சிறந்த கல்வியறிவு மற்றும் பணித்திறன் சார் மக்களைப் பெற்றுள்ளோம். மாநிலத்தின் சுகாதாரக் குறியீடுகள், நாட்டிலேயே சிறந்து விளங்குகின்றன. எமது கொள்கைகளின் பலனாக, தமிழ்நாட்டில் உள்ள தொழிற்சாலைகள் நிம்மதியாக இயங்க முடிகின்றன. தமிழ்நாட்டில் தொழில் உறவுமுறைகள், நாட்டிலேயே சிறந்த கட்டுக்கோப்புடனும், சுமூகமாகவும் உள்ளன. நான் அடிக்கடி சொல்வதுபோல, ‘‘எல்லோருக்கும், எல்லாமும்’’ என்பதற்கு ஏற்றார்போல, தமிழ்நாடு தமது உள்ளார்ந்த வளர்ச்சி திட்டத்தினை வகுத்துள்ளது.

தமிழ்நாடு முதலீடுகள் ஊக்குவிப்புத் திட்டம்

தொழிற்சாலைகளின் எண்ணிக்கையிலும் ஏறத்தாழ 2 மில்லியன் தொழிலாளர்களை உட்படுத்திய தொழிற்துறை வேலைவாய்ப்பிலும் இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் முதன்மை மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. இந்தியா முழுவதும் ஊக்குவிக்கப்பட்டு,

2013–2014ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட புது குறு, சிறு மற்றும் நடுத்தர தொழிற்சாலைகளின் எண்ணிக்கையில், 1,16,393 தொழிற்சாலைகளைக் கொண்டு தமிழகம் முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது. இவ்வெண்ணிக்கை 2014–2015ஆம் ஆண்டில் 1,43,104 ஆக மேலும் உயர்ந்தது.

வணிக நிறுவனக் கூட்டமைப்பு, பிப்ரவரி 2015இல் வெளியிட்ட "மாநிலங்கள் உதயம்: வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தைப் பற்றிய ஓர் ஒப்பாய்வு" என்ற அறிக்கையின்படி, பொருளாதாரம், தொழில்துறை முன்னேற்றம், ஒருங்கிணைக்கப்பட்ட உள்கட்டமைப்பு, மின்னாற்றல், சாலைகள் போக்குவரத்து, சுகாதாரம், வருமானம் (ம) சமத்துவமின்மை மற்றும் ஒட்டுமொத்த முன்னேற்றம் ஆகிய ஒன்பது அளவுருக்களில் எட்டில் சிறப்பாகச் செயலாற்றும் மாநிலமாகத் தமிழ்நாடு தரப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் முதலீட்டுச் சூழலை மேம்படுத்துவதற்காகக் கடின உழைப்பை அரசும், நிறுவனங்களும் நல்கியுள்ளன. ஜப்பான் பன்னாட்டு ஒத்துழைப்பு அமைப்பின் (JICA)

துணையோடு, தமிழ்நாடு முதலீடுகள் ஊக்குவிப்புத் திட்டம் (TNIPP) என்னும் ஒரு திட்டத்தை மிகப் புதுமையான தொழில்நுட்பத்துடன் வடிவமைத்துள்ளோம். மாநில அரசின் கொள்கை முன்னுரிமைகளோடு முதலீட்டாளர்களின் எதிர்பார்ப்புகளை நேர்படுத்தும் வேலையை, ‘தமிழ்நாடு முதலீடுகள் ஊக்குவிப்பு திட்டம்’ சிறப்பாகச் செய்கிறது. எனது தலைமையிலான அரசு, மாநிலம் முழுவதற்குமான சமச்சீர் தொழிற்துறை முன்னேற்றத்தில் நம்பிக்கை கொண்டுள்ளது. எனவே, தமிழ்நாட்டில் தென்மாநிலங்களில் முதலீடு செய்யும் முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் வண்ணம், விரும்பத்தகுந்த சலுகைகளை எனது தலைமையிலான அரசு, அறிமுகப்படுத்தியுள்ளது. தொழிற்துறைக்காக 42,000 ஏக்கர் நிலங்கள் தயார் நிலையில் இருக்கின்றன. தமிழ்நாட்டில்,

முதலீடு தொடர்பான வாக்குறுதிகளை நிறைவேற்ற ஏதுவாக, தேவையான அனைத்து இறுதி ஒப்புதல்களையும் 30 நாட்களுக்குள் முடிக்குமாறு ஆணை பிறப்பித்துள்ளேன். இது, மிகைப்படுத்தல் இல்லாத திறன்வாய்ந்த சேவை வழங்கலை கருத்தில் கொண்ட ஒரு புதிய மாநிலமாகத் தமிழ்நாடு மாறவுள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

மாநிலத்தில் மிக விரும்பத்தக்க முதலீட்டுச் சூழல் அமைந்திருப்பதை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் உற்சாகமாக ஒப்புக்கொண்டுள்ளனர். ஏப்ரல் 2011 முதல் ஜுன் 2015 வரை கோரப்பட்டுள்ள மொத்த கூடுதல் முதலீடு ரூ.2,61,709.92 கோடி என்று இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையத்தின் (CMIE) தரவுகள் தெரிவிக்கின்றன. தமிழகம், மே 2011 முதல் இன்று வரை ரூ.43,101.81 கோடி மொத்த மதிப்பிலான 86 முதலீடுகளைப் புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் ஒற்றைச் சாளர முறைகளின் மூலம் வழங்கியுள்ளது.

மிக முக்கியமான இத்தருணத்தில், ஆண்டுக்கு 1.8 மில்லியன் இருசக்கர வாகனங்களைத் தயாரிக்கும் திறன்வாய்ந்த திருவாளர்கள், இந்தியா யமஹா மோட்டார் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தைக் காஞ்சிபுரத்திலும், ரூ.1,600 கோடி முதலீட்டில் அதன் 9 விற்பனை நிலையங்களையும், ரூ.168 கோடி முதலீட்டில் TICEL (II) உயிர்ப் பூங்காவைத் தரமணியிலும், ரூ.800 கோடி முதலீட்டில் டி.வி.எஸ். மோட்டார் நிறுவனத்தின் ஒரு விரிவாக்க மையத்தை ஒசூரிலுமாக மொத்தம் ரூ.2,568 கோடி மதிப்பிலான மூன்று பெரிய தொழில் திட்டங்களைத் தொடங்கியுள்ளேன்.

தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023

மாண்புமிகு இந்திய நாட்டின் பிரதமர், நட்பார்ந்த முதலீட்டாளர்களினுடைய சூழலை உருவாக்க அண்மையில் பல திட்டங்களை உருவாக்கி வருகிறார். அதன்மூலம், வெளிநாட்டு நிதியை நேரடியாகப்பெறும் சூழலும் வளர்ந்து வரும். அதன் அடிப்படையில் பல முதலீட்டாளர்களுக்கு இந்தியாவிலுள்ள பல மாநிலங்களில் முதலீடு செய்ய ஆர்வமும்

பெருகி வருகிறது. இந்த அடிப்படையில், இந்த மாநாட்டிற்கு வருகை புரிந்திருக்கும் முதலீட்டாளர்களுக்கு, ஆர்வம் ததும்ப, மாண்புமிகு வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், மத்திய அரசு அளவில் தமிழக அரசிற்கு வருகின்ற அனைத்து முதலீடுகளுக்கும் உடனடித் தீர்வு மற்றும் ஒப்புதல் வழங்க வேண்டுகிறேன். மாண்புமிகு சாலைப் போக்குவரத்து, நெடுஞ்சாலை மற்றும் கப்பல் போக்குவரத்து மத்திய அமைச்சர் திரு.பொன்.ராதாகிருஷ்ணன் அவர்கள், எனது தலைமையிலான அரசின் தமிழ்நாடு தொலைநோக்குத்திட்டம் 2023இன் கீழ் உள்ள பல்வேறு உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு உரிய ஒத்துழைப்பினை நல்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாட்டினுடைய ஒட்டுமொத்த முதலீடாக எனது தலைமையிலான அரசு ரூ.1 இலட்சம் கோடி முதலீடுகள் பெறுவதற்குத் திட்டமிட்டது.

ஆனால், இன்று அந்த இலக்குத் தொகையினை, விஞ்சி விட்டோம். எனக்கு மிகுந்த நம்பிக்கை ஏற்பட்டிருக்கின்றது. இன்றும் நாளையும் இந்த மாநாட்டின் மூலமாக இன்னும் முதலீடுகள் பெறுவதற்கு வாய்ப்பு பல்கியுள்ளது. நாளை மீண்டும் இந்த மாநாட்டின் மூலமாகப் பெருவாரியான முதலீட்டுத் தொகையினை, மாபெரும் வெற்றிச் செய்தியாக அறிவிக்க உள்ளேன்.

இங்கு கூடியிருக்கின்ற முதலீட்டாளர்களுக்கு, வலியுறுத்துவது என்னவெனில், தமிழ்நாட்டில் முதலீடு செய்தால், அது சிறந்த முதலீடாக அமையும். காரணம், அந்த முதலீடு, சிறந்து உழைக்கும் திறன் வாய்ந்த நம்பத்தகுந்த மக்கள் வளம் வாய்ந்த மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. தமிழ்நாட்டின் இந்த மனிதவளத் தொகைதான், தமிழ்நாட்டினுடைய வளர்ச்சியின் ஒட்டுமொத்த திறவுகோல் ஆகும். இந்த மனிதவளம்தான் இந்திய நாட்டினுடைய மேம்பாட்டுக் குறியீடாக விளங்குகிறது.

உலகெங்கும் உள்ள பல தொழிற்சாலைகள், நிறுவனங்கள், குழுமங்களின் வெற்றிகளுக்கு தமிழர்களினுடைய பங்கு மகத்தானது. அந்த வெற்றிப்பங்கின் வெற்றியாளர்கள் இன்று இங்கு வருகை புரிந்திருக்கிறார்கள். அவர்களை வரவேற்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

பல முதலீடுகளைப் பெற்றிருந்தாலும், இந்த மாநாட்டின் மூலமாக இன்னும் பல எதிர்கால முதலீடுகள் பெருக வாய்ப்புள்ளது. 24 கருத்தரங்குகளினூடே 8 நாடுகளின் கருத்தரங்குகளும் நடைபெறவுள்ளது. இந்தக் கருத்தரங்குகளில் பல்வேறு கருத்துக்களும், பல தொழில் சார்ந்த நுட்பங்களும், முதலீட்டாளர்களுக்கு நல்கப்படவுள்ளன. இதன்மூலம், தமிழ்நாட்டினை நன்கு புரிந்து கொள்ளும் வாய்ப்பினையும் நீங்கள் பெறுவீர்கள்.

எனது தலைமையிலான அரசின் அமைச்சர் பெருமக்களும், உயர் அலுவலர்களும், உங்களுடன் கலந்து, உங்களின் கருத்துக்களை அறிந்து பரிமாறிக்கொள்ளும் நல்வாய்ப்பாக இந்த மாநாடு அமையும். இங்கு நடைபெறவுள்ள கண்காட்சியில் தத்தம் நிறுவனங்களுடைய செயல்பாடுகளையும் அறிந்து கொள்ளலாம். அனைத்திற்கும் மேலாக இந்த இரண்டு நாட்களிலும் நீங்கள் இணைந்து உரையாடி பல்வேறு தொடர்புகளையும், எண்ணங்களையும் பெற்று, உலகளாவிய வணிகம் தமிழ்நாட்டில் பெருகுவதற்கு வாய்ப்பாக அமைத்துக் கொள்ளுங்கள்.

தமிழ்நாட்டு மக்கள் சார்பாக, உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் பங்கேற்க, தங்களை முழுமனதாக நான் வரவேற்கின்றேன். இவ்வருகையைத் தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் உள்ள கலாச்சார மற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களையும், வரலாற்று நகரமான சென்னையையும் சுற்றிப்பார்க்க வாய்ப்பாக ஆக்கிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். இந்தியாவிலேயே, மற்ற மாநிலங்களை விட தமிழ்நாடு அதிக அளவிலான சர்வதேச மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையைப் பெற்றுள்ளது. உங்களைச் சுற்றுலாப் பயணிகளாக நாங்கள் வரவேற்கின்றோம். முக்கியமாகத் தமிழ்நாட்டின் வளர்ச்சியினை நோக்கிச் செல்லும் உந்துதல் மிக்க பயணத்தில், நீங்கள் எங்களோடு இருந்து, இணைந்து பயணிக்க வரவேற்கின்றோம். “தமிழ்நாட்டில் முதலீடு செய்யுங்கள். நமது ஒருங்கிணைந்த எதிர்காலத்திற்காக முதலீடு செய்யுங்கள்.”

நன்றி – வணக்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் 10.09.2015 அன்று
சென்னை, நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நடைபெற்ற
தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் சந்திப்பு 2015
நிறைவு விழாவில் கலந்து கொண்டு
ஆற்றிய பேருரையின் தமிழாக்கம்

அம்பாஸடர்ஸ், ஹை கமிஷனர்கள் மற்றும் பல்வேறு நாடுகளின் தலைவர்கள், பிரதிநிதிகள், மாண்புமிகு நாடாளுமன்ற துணை சபாநாயகர் டாக்டர் எம். தம்பிதுரை,

மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. பி.தங்கமணி, மாண்புமிகு தமிழக அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அப்பல்லோ மருத்துவமனை தலைவர் டாக்டர் பிரதாப் சி. ரெட்டி, தியாகராஜா மில்ஸ் மேலாண் இயக்குநர் திரு. கருமுத்து கண்ணன், அமெரிக்கா–இந்தியா வர்த்தக கவுன்சில் நிருவாக துணைத்தலைவர் டயான் ப்ரெல், மலேசியாவின் டைமா லாங்கட் தலைவர் டான் செரி டத்தோ ஹரி நாராயணன், பல்வேறு தொழில் நிறுவனங்களின் தலைவர்கள் இந்தியா மற்றும் வெளிநாடுகளிலிருந்து வருகை தந்துள்ள தொழில் முனைவோர்கள், தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் திரு. கே. ஞானதேசிகன், அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், தொழில் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.சி.வி.சங்கர், மத்திய, மாநில அரசுகளின் உயர் அலுவலர்கள் மற்றும் வருகை தந்துள்ள ஆடவர்கள், மகளிர்களே அனைவருக்கும் வணக்கம்.

2014–2015ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் போதே தமிழ்நாடு அரசு சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாடு மார்ச் 2014இல் நடைபெறும் என அறிவித்தது.

இந்தச் சந்திப்பு மிகுந்த திட்டத்துடன் மிக கவனமாக நானே அனைத்துக் கூறுகளையும் ஆய்ந்தேன். இம்மாநாடு தொடர்பான பல்வேறு முதலீட்டாளர்கள் சந்திப்புகள், மாநாட்டின் சிறப்புக் கூறுகள் அடங்கிய பதாகைகளுடன், 11 வெளிநாடுகளிலும் மற்றும் இந்தியாவின் 16 மாநகரங்களிலும் நடைபெற்றது. இந்த மாநாட்டின் வெற்றிக்காக, 9 நாடுகள் 23 கூட்டமைப்பு நாடுகளின் நிறுவனங்கள் இணைந்து செயலாற்றின. நேற்றும், இன்றும் நடந்த இந்த சந்திப்பு இங்கு கூடியிருக்கும் அனைவருக்கும் மிக பலன் வாய்ந்ததாக அமைந்திருக்கிறது.

மிகுந்த மகிழ்ச்சியுடன் நான் தெரிவிக்க விரும்புவது என்னவெனில், எனது தலைமையிலான அரசின் திட்டங்களால் தமிழ்நாட்டிற்கு சென்னையில் நடைபெற்ற சர்வதேச முதலீட்டாளர்கள் சந்திப்பு மூலமாக மாபெரும் முதலீடாக ரூ.2,42,160 கோடி பெறப்பட்டுள்ளது. இந்த முதலீடு நிர்ணயித்த இலக்கை விட இரண்டரை மடங்காகும். 1991–2011 காலகட்டத்தில் போடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களையும் தாண்டி இந்த முதலீடு, தமிழ்நாட்டின் அதிகப்படியான ஒட்டுமொத்த முதலீடு ஆகும். இன்று மட்டுமே மொத்தம் 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டு அரசுக்கும் நிறுவனங்களுக்கும் பரிமாறப்பட்டுள்ளது.

ரூ.1,04,286 கோடி உற்பத்தி தொழிலகங்களுக்கும், ரூ.1,07,136 கோடி எரிசக்தி சார்ந்த தொழிலகங்களுக்கும், ரூ.10,950 கோடி தகவல் தொழில்நுட்பத் திறன் சார்ந்த தொழிலகங்களுக்கும், ரூ.1,955 கோடி கைத்தறி மற்றும் ஆடை உற்பத்திக்கும், ரூ.800 கோடி வேளாண் சார்ந்த தொழில்களுக்கும், ரூ.500 கோடி மீன்வளம் சார்ந்த தொழில் முதலீடுகளுக்கும் என ஒட்டுமொத்தமாக ரூ.2,42,160 கோடிக்கு முதலீடுகள் பெறப்பட்டுள்ளன.

எனது தலைமையிலான அரசின் 2012ஆம் ஆண்டு அறிவிப்பின் மூலம், சூரிய ஒளி மின்னாற்றல் திட்டக் கொள்கையின் நேரடி விளைவாக இந்த சர்வதேச முதலீட்டாளர்கள் சந்திப்பின் வாயிலாக, 5,345 மெகாவாட் சூரிய ஒளி மின்னாற்றல் திட்டங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் 35,356 கோடி ரூபாய்க்கு செய்யப்படவுள்ளன. 10,000க்கும் மேலான குறு, சிறு தொழிற்சாலைகள் அமைக்க புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டு, 16,553 கோடி ரூபாய் முதலீடுகள் செய்யப்படவுள்ளன.

மதுரை–தூத்துக்குடி தொழில் பூங்கா திட்டம்

எனது தலைமையிலான அரசு, நடுநிலைமையான தொழில் வளர்ச்சிக் கோட்பாடு மாநிலமெங்கும்

நடைபெறவேண்டும் என விரும்புகிறது. ஆகவே, அதன் மூலமாக, மிகச்சிறந்த சலுகைகள் கொண்ட திட்டங்களை தமிழ்நாட்டின் தென்மாவட்டங்களுக்கு வழங்க விரும்பியது. அதனடிப்படையில் கட்டுமானத் துறைக்கு மட்டுமே சிறந்த பலனாக, ரூ.1,04,286 கோடிக்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன. இதன் மூலமாக தென்மாவட்டங்களுக்கு மட்டுமே 50 சதவிகிதத்திற்கு மேல் முதலீடுகள் கிடைக்கப்பெறும். எனது தலைமையிலான அரசின் தொலைநோக்குப் பார்வையால், ஒப்புதல் அளிக்கப்பட்ட, அற்புதமான நீண்டகால சிறப்பு பெற்ற மதுரை–தூத்துக்குடி தொழில் பூங்கா திட்டத்திற்கு பெருமளவிலான முதலீட்டு வாய்ப்புகள் இன்றைக்கு ஏற்பட்டுள்ளன.

இன்று கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தங்களில் ஒன்றான, தூத்துக்குடியில் இயற்கைவாயு (LNG) முனையம் அமைக்கும் திட்டம் தொடங்கக்கூடிய தருவாயில் உள்ளது. இந்தத்

திட்டம் எண்ணூரில் தொடங்குவதற்காக அறிவிக்கப்பட்ட நீண்டகால எரிசக்தித் தேவையைப் பூர்த்தி செய்வதுடன், உற்பத்தித் துறையில் போட்டித் தன்மையினையும் மேம்படுத்தும்.

நிமிடத்துக்கு மூன்று கார்கள் உற்பத்தி

ஏற்கெனவே, தமிழ்நாடு உலகத்தின் சிறந்த 10 ஆட்டோமொபைல் உற்பத்தி மையங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. தற்போது, சென்னை ஓர் ஆண்டிற்கு 1.4 மில்லியன் கார்களை உற்பத்தி செய்யும் தனித்திறனைக் கொண்டுள்ளது. அதாவது, ஒரு நிமிடத்திற்கு 3 கார்கள் சென்னையிலேயே தயாரிக்கப்பட்டு வருகிறது. இன்று ஆட்டோமொபைல் சார்ந்த மிகப்பெரும் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திட்டதனால், உலகிலேயே சென்னை மிகப்பெரிய கார் உற்பத்தி மையமாக மாறும். உலகிலேயே தமிழ்நாட்டை உற்பத்தித் துறையில் முதன்மையாகவும், தலைமையிடமாகவும் மாற்றுவது எனது இலட்சியமாகும்.

தமிழ்நாட்டு மக்கள் மீதும், எனது தலைமையிலான அரசின் மீதும், அதன் கொள்கைகள் மீதும், பெரும் நம்பிக்கை வைத்து, தமிழ்நாட்டில் பெருமளவில் முதலீடு செய்ய முன்வந்து முதலீடு செய்துள்ள அனைத்து முதலீட்டாளர்களுக்கும், எனது உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் வைத்த நம்பிக்கைக்கு முழுபலன் கிடைக்கும் என நான் உறுதியளிக்கிறேன். அறிவுப்பூர்வமான முதலீடு செய்யும் இடத்தினை நீங்கள் தேர்வு செய்துள்ளீர்கள். தமிழ்நாட்டில் நீங்கள் செய்த முதலீடுகள் பாதுகாப்பாகவும், இருதரப்பிற்கும் நன்னம்பிக்கை அளிப்பதாகவும் இருக்கும்.

30 நாட்களுக்குள் ஒப்புதல்கள்

இன்று, இங்கு இறுதி செய்யப்பட்ட ஒவ்வொரு முதலீட்டிற்கும், தேவையான ஆவணங்களுடன், ஒற்றைச்சாளர ஒப்புதல் வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. தொழில் முதலீட்டுக்கான விண்ணப்பங்களோடு தகுந்த ஆவணங்களையும் வழங்கிய நாளிலிருந்து, 30 நாட்களுக்குள் ஒப்புதல் வழங்கப்படும் என நான் உறுதி கூறுகிறேன். ஒவ்வொரு திட்டத்திற்கும், மாநில அரசின் மூத்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகளை ஒருங்கிணைப்பாளராக எனது தலைமையிலான அரசு நியமித்துள்ளது. மேலும், 30 நாட்களுக்குள் ஒப்புதல்கள் வழங்குவதற்காக அனைத்து சம்பந்தப்பட்டத் துறைகளையும், முதலீட்டாளர்களுடன் கலந்து ஆலோசித்து அதிகாரிகளால் நல்கப்படும்.

முதலீட்டாளர்களின் சொர்க்கம்

தமிழ்நாட்டில் சட்டப்பூர்வமான நெறிமுறைப் படுத்தப்பட்ட ஒப்புதல் வழங்குமுறை நடைமுறையில் உள்ளது. பெரும்பாலானவை இணைய வழியாகவே செயல்படும். இருப்பினும், சில ஒப்புதல் செயல்முறைகள் இணைய வழியாக ஆக்கப்படவில்லை. அனைத்து சட்டரீதியான செயல்முறைகளும் முன்திட்ட ஒப்புதல்கள் வழங்கு முறைகளும் மிக விரைவில் வழங்கப்படும் என்றும் இதன்மூலம் தொகுக்கப்பட்ட அனைத்து வணிகக் குறியீடுகளின் உச்சமாகத் தமிழ்நாடு திகழும் என்றும் எனது தலைமையிலான அரசு உறுதி கூறுகிறது. இந்தியாவின் விருப்பத்துக்கு உகந்த முதல் முதலீட்டு இலக்காகவும், ஆசியாவின் தலைசிறந்த மூன்று முதலீட்டு இலக்குகளில் ஒன்றாகவும் தமிழ்நாடு திகழ வேண்டும் என்பதே எங்கள் நோக்கமாகும். அந்த நிலையை அடையவும்

தக்கவைக்கவும் தேவையான அனைத்து முயற்சிகளையும் எனது தலைமையிலான அரசு மேற்கொள்ளும் என்பதையும் உறுதிசெய்கிறோம்.

சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாடு பெரும் வெற்றியடைய, பங்களித்த கூட்டு நாடுகளையும் வணிக மேம்பாட்டு நிறுவனங்களையும் நான் உளமாரப் பாராட்டுகிறேன். சென்னையில் இருக்கும் துணைத்தூதரக அதிகாரிகள், புது தில்லியிலுள்ள தூதரக அதிகாரிகள் மற்றும் வெளிநாட்டில் இருக்கும் இந்தியத் தூதரகங்கள் இன்றியமையாத ஒத்துழைப்பை நல்கியுள்ளன. அவை தமிழ்நாட்டில் நிலவும் முதலீட்டு வாய்ப்புகளை மிகச் சிறப்பான முறையில் வெளிநாடுகளுக்குத் தெரியப்படுத்தியுள்ளன. குறிப்பாக, இம்மாநாட்டில் பங்குபெறுவதற்காக தொலைதூரப் பயணங்கள் மேற்கொண்டு வருகைப் புரிந்திருக்கும் வெளிநாட்டு பிரதிநிதிகளால் இந்தச் சந்திப்பு சிறப்பெய்தியுள்ளது.

தமிழ்நாட்டையும் அதன் முதலீட்டுச் சூழலையும் புரிந்து கொள்வதற்காக இம்மாநாட்டில் கலந்து கொண்ட இந்திய மற்றும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் அனைவரும், தமிழ்நாடு ‘முதலீட்டாளர்களின் சொர்க்கம்’ என்பதை உளமார ஏற்றுக் கொண்டிருப்பது எனக்கு நம்பிக்கையளிக்கிறது. இன்று மேற்கொள்ளப்பட்டிருக்கும் மிகப்பெரிய முதலீட்டு ஒப்பந்தங்கள் உங்கள் அனைவருக்கும் ஒரு உத்வேகம் அளித்திருக்கும் என்பதில் ஐயமில்லை. முதலீட்டுக்கான வாய்ப்புகள் இன்னும் இருக்கின்றன. எனவே, தமிழ்நாட்டில் முதலீடு செய்து, எங்களது வளர்ச்சி வரலாற்றில் இணைந்து கொள்ள உங்களை மீண்டும் வரவேற்கிறேன். இந்நிகழ்ச்சி உங்களது முதலீட்டுத் திட்டங்களை விரைவில் உறுதி செய்ய ஊக்குவித்துள்ளது என நம்புகிறேன்.

தொலைநோக்கு கொள்கைகள்

உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை பெரும் வெற்றியாக்கித் தந்த, எனது அமைச்சரவையின் அமைச்சர்களையும், மாநில அரசு அதிகாரிகளையும், வர்த்தக மற்றும் தொழில் துறையின் பல்வேறு அமைப்புக்களையும் நான் பாராட்டுகிறேன். நமக்கு முன்னே இருப்பதை நாம் மறக்கக் கூடாது. வாக்குறுதிகளைக் காப்பாற்றவும், உத்தரவாதங்களை செயல்முறைப்படுத்தவும், ஒப்புதல்களை நிறைவேற்றவும் நாம் கடமைப்பட்டுள்ளோம். எனது தலைமையிலான அரசு கடந்த கால சாதனைகளை நினைத்து ஓய்ந்திருக்காமல், உயரிய இலக்குகளை அடைய தொடர்ந்து கடினமாக உழைத்துக் கொண்டிருக்கிறது. இதைத் தொடர்ந்து, மரபார்ந்த துறைகளான கைத்தறி ஆடைத் தொழிலகங்களுக்கும், குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களில் மட்டுமல்லாமல், தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார் சேவைகள், மின்னணு வன்பொருள் உற்பத்தி, விண்வெளி மற்றும் பாதுகாப்பு சார்ந்த தளவாடங்கள் உற்பத்தி ஆகியவற்றிலும், நடைமுறைக்கேற்ற தொலைநோக்குக் கொள்கைகளை எனது தலைமையிலான அரசு விரைவில் நடைமுறைப்படுத்தும்.

2017இல் அடுத்த முதலீட்டாளர்கள் மாநாடு

சென்னையில் நடைபெற்ற முதல் சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாடு மிகப்பெரிய வெற்றி பெற்றுள்ளது. செயலூக்கத்தை நீடிக்கவும், அமைப்புகளை பலப்படுத்தவும் வேண்டிய முக்கியத்துவத்தை இம்மாநாடு மூலம் உருவாகியுள்ளது என நான் உறுதியாக நம்புகிறேன். இவற்றை செயல்படுத்த, இதைப் போன்ற மாநாடுகளை குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை நடத்துவது அவசியமாகும். இனி, இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை, தமிழ்நாட்டில் சர்வதேச முதலீட்டாளர் மாநாடு நடக்கும் என நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்த மாநாடு 2017ஆம் ஆண்டு நடைபெறும்.

முதலீடுகள், அவரவர்களின் சொந்த நன்மைக்காக செய்யப்படுவதில்லை என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. முதலீட்டாளர்கள், தங்களுக்கு நேரடிப் பலன்கள் வரும் என எதிர்பார்ப்பது அவர்களின் கடமையாகும். அதுவே பொருள் வாய்ந்ததாகவும், செய்யும் பணிகளில் நிறைவு தருவதாகவும் அமைய வேண்டும். உயர் வருவாயும் மற்றும் சிறந்த தரப்படுத்தப்பட்ட வாழ்வுமுறை வளர்ச்சியுமே எய்துகின்ற வளத்தில், பொருட்கள் மற்றும் சேவைச் சந்தையில் பலமான வளர்ச்சியை ஏற்படுத்தி, மதிப்புக் கூட்டு உற்பத்திக்கு உயர்தரமான மனித வளத்தினைத் தந்து, முதலீட்டாளர் உட்பட அனைவருக்கும் பலன் அளிக்கக்கூடியதாகும். அறம் சார்ந்த இந்த விழுமியத்தின் மூலம் தமிழ்நாட்டை மென்மேலும் வளர்த்தெடுப்பது நமது நோக்கமாகும். இந்த உன்னதமான முயற்சியினால், நீங்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு இன்று, சிறந்த முதலீடுகளை செய்ய வந்திருப்பது வரவேற்கத்தக்கது. தலைசிறந்த தமிழ்நாட்டையும், இந்தியத் திருநாட்டினையும் சிறந்த வெற்றிக்கும், வளர்ச்சிக்கும் பாதை அமைத்து நடைமுறைப்படுத்தி வழிநடத்துவோம்.

நன்றி! வணக்கம்!

❖ ❖ ❖